

2025இல் இணையவழிக் கற்றல் தளமான 'கோர்செரா'வில், உலகளவில் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) பாடங்களைக் கற்றவர்களில் பெண்களின் பங்கு 36% என ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை 2025இல் 'கோர்செரா' தளத்தில் ஏ.ஐ. பாடங்களைக் கற்ற இந்தியர்களில் 31.2% பேர் பெண்கள்.



'கற்றனைத் தூறும் அறிவு' சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் அன்பில் மகேஸ், எ.வ.வேலு, பள்ளிக்கல்வித்துறை செயலர் பி.சந்திரமோகன் உள்ளிட்டோர்.

# மெரினாவில் ரூ.1 கோடியில் 'கற்றனைத் தூறும் அறிவு சிலை'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

### முஸ்லிம் பெண்களுக்கு எதிராக உள்ள ஷரியத் சட்டம் போன்ற முரண்பாடுகளுக்கு

# பொது சிவில் சட்டம் கொண்டு வருவதுதான் தீர்வு

## உச்ச நீதிமன்றம் கருத்து

புதுடெல்லி

முஸ்லிம் பெண்களுக்கு எதிராக உள்ள ஷரியத் சட்டம் போன்ற முரண்பாடுகளுக்கு பொது சிவில் சட்டம் கொண்டு வருதே தீர்வாகும் என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

முஸ்லிம் பெண்களுக்கு எதிராக உள்ள ஷரியத் சட்டத்தை எதிர்த்து பவுலமி பவனி சுக்லா என்பவர் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவில், 1937-ம் ஆண்டு ஷரியத் சட்டம் வாரிசு சொத்துகளை வழங்குவதில் முஸ்லிம் பெண்களுக்கு எதிராக இருப்பதால் அதை ரத்து செய்ய வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

இந்த மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த். நீதிபதிகள் ஜோய்மால்யா பக்சி, ஆர். மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று விசாரித்தது.

மனுதாரர் சார்பில் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் ஆஜராகி, ஆண்களுக்கு இணையாக முஸ்லிம் பெண்களுக்கு சமமான சொத்துரிமையை கொண்டுள்ளனர் என்று அறிவித்து ஷரியத் முஸ்லிம் தனிநபர் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என வாதிட்டார்.

இதற்கு நீதிபதிகள், சீர்திருத்தம் என்ற பெயரில், முஸ்லிம் பெண்களுக்கு தற்போதுள்ள உரிமைகளும் கிடைக்காமல் போகச் செய்யும் நிலை உரு



வாகலாம். ஷரியத் சட்டத்தை ரத்து செய்தால், தேவையற்ற வெற்றிடம் உருவாகாதா? என தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

நீதிபதி ஜோய்மால்யா பக்சி கூறும்போது, "முஸ்லிம் பெண்களுக்கு எதிரான பாகுபாடு குறித்து இந்த நல்ல விவகாரத்தை, வழிகாட்டும் கோட்பாடுகளின்படி அரசமைப்பு சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள பொது சிவில் சட்டமியற்றும் அதிகாரத்தை படைத்த நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளிடம் விட்டுவிடுவது பொருத்தமாக இருக்காதா" என்று கேட்டார். அப்போது, தலைமை நீதிபதி, இதற்கு தீர்வு பொது சிவில் சட்டம் கொண்டு வருவதாகும் என்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நீதிபதி ஜோய்மால்யா பக்சி, "ஒரு மனைவிக்கு ஒரு கணவர் என்பது அனைத்து சமூகங்களிலும் நடைமுறையில் இல்லை. அதற்காக தனிநபர் சட்டத்தின் கீழ் இரு தாரம், பலதார திருமணங்கள் சம உரிமைக்கு எதிரானது என அறிவிக்க முடியுமா? இந்த விவகாரத்தை வழிகாட்டும் கோட்பாடுகளின்படி சட்டமியற்றும் நாடாளுமன்றம், சட்டப் பேரவைகளுக்கு விடுவதே பொருத்தமாக இருக்கும். ஏற்கெனவே பொது சிவில் சட்டத்தை இயற்ற உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது" என்று குறிப்பிட்டார். இதைத் தொடர்ந்து, உரிய திருத்தங்களை மேற்கொள்ள அனுமதி அளித்து விசாரணையை உச்ச நீதிமன்றம் ஏப்ரல் 17-ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளது.

**ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் எதிரொலி**

# சமையல், வர்த்தக காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு

**நாடு முழுவதும் ஓட்டல்கள் உட்பட பல்வேறு தொழில்கள் ஸ்தம்பிப்பு**

புதுடெல்லி

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதால், சமையல் மற்றும் வர்த்தக காஸ் சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நாடு முழுவதும் ஓட்டல்கள் உட்பட பல்வேறு தொழில்கள் ஸ்தம்பித்துள்ளன.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரானுக்கு இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் வயல்கள், இயற்கை எரிவாயு உற்பத்தி ஆலைகள் மூடப்பட்டுள்ளன.

மேலும், ஹார்முஸ் ஜலசந்தியில் சரக்கு கப்பல் போக்குவரத்தை ஈரான் ராணுவம் முடக்கி உள்ளது. இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளின் 85 சதவீத கச்சா எண்ணெய் போக்குவரத்து, எல்பிஜி காஸ் போக்குவரத்து இந்த ஜலசந்தி வழியாகவே நடைபெறுகிறது.

இந்தியாவில் சுமார் 90 நாட்களுக்கு தேவையான கச்சா எண்ணெய் இருப்பு உள்ளது. இதனால் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை, விலையும் உயர்த்தப்படவில்லை. ஆனால், சமையல் காஸ் (எல்பிஜி) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எல்பிஜி.யைப் பொறுத்த வரையில் சுமார் 80 சதவீதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவின் எல்பிஜி தேவையில் 40 சதவீதத்தைக் கத்தார் பூர்த்தி செய்கிறது. ஈரான் தாக்குதல் காரணமாக கத்தாரின் முன்னணி நிறுவனங்கள் எல்பிஜி உற்பத்தி ஆலைகளை மூடி விட்டன. மேலும் ஹார்முஸ் ஜலசந்தியில் போக்குவரத்து முடங்கியிருப்பதால் இந்திய பொதுத் துறை, தனியார் நிறுவனங்களால் எல்பிஜியை இறக்குமதி செய்ய முடியவில்லை.



கர்நாடக தலைநகர் பெங்களூருவில் வர்த்தக காஸ் சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, பெரும்பாலான ஓட்டல்கள் மூடப்பட்டு உள்ளன. அங்குள்ள ஒரு ஓட்டலில் காலி சிலிண்டர்கள் அடுக்கி வைக்கப்பட்டு உள்ளன. படம்: பிடிஐ

பொதுவாக இந்தியாவிடம் சுமார் 21 நாட்களுக்கு தேவையான எல்பிஜி மட்டுமே இருப்பில் வைக்கப்பட்டிருக்கும். அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் 10 நாட்களுக்கு மேலாக நீடிக்கும் நிலையில் இந்தியாவின் எல்பிஜி இருப்பு கணிசமாக குறைந்து வருகிறது. இதன் எதிர்விளைவாக நாடு முழுவதும் சமையல் மற்றும் வர்த்தக காஸ் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தொழில், வணிக நிறுவனங்களுக்கான சிலிண்டர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக இந்தியன் ஆயில் நிறுவனம் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

பெங்களூரு, மும்பை உள்ளிட்ட பெரு நகரங்களில் வணிக எல்பிஜி சிலிண்டர்கள் இல்லாமல் ஆயிரக்கணக்கான ஓட்டல்கள் மூடப்பட்டு வருகின்றன.

மும்பையில் சுமார் 3,869 பெரிய ஓட்டல்களும் ஆயிரக்கணக்கான சிறிய ஓட்டல்களும் செயல்படுகின்றன. வணிக எல்பிஜி தட்டுப்பாடு காரணமாக 50 சதவீத ஓட்டல்கள் மூடப்பட்டு உள்ளன சென்னை, புனே, கொல்கத்தா, டெல்லி உட்பட நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் ஓட்டல் தொழில் முடங்கி வருகிறது.

நாடு முழுவதும் 33 கோடி வீட்டு உபயோக சமையல் காஸ் வாடிக்கையாளர்கள் உள்ளனர். அதோடு நாடு முழுவதும் 70.75 லட்சம் வீடுகளுக்கு குழாய் மூலம் எல்பிஜி விநியோகிக்கப்படுகிறது.

தட்டுப்பாடு காரணமாக வீட்டு உபயோக எல்பிஜி சிலிண்டர் விநியோகம் பாதிக்கப்பட்டு உள்ளது. போர் நீடிக்கும் என்ற அச்சத்தின் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் முன்கூட்டியே எல்பிஜ சிலிண்டரை முன்பதிவு செய்து வருகின்றனர். சுமார் 20 சதவீதம் அளவுக்கு முன்பதிவு அதிகரித்திருக்கிறது. இதனால் சிலிண்டர்களை விநியோகம் செய்வதில் மிக நீண்ட தாமதம் ஏற்பட்டு வருகிறது.

**டேங்கர் லாரிகள் நிறுத்தம்**

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, புதுச்சேரி ஆகிய 6 மாநிலங்களை உள்ளடக்கிய தென் மண்டல எல்பிஜி காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் நாமக்கல்லை தலைமை இடமாக கொண்டு செயல்படுகிறது. இந்த சங்கத்தில் 4 ஆயிரம் காஸ் டேங்கர் லாரிகள் உள்ளன.

போர் பாதிப்பு காரணமாக இந்தியாவில் வர்த்தக காஸ் விநியோகம் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் 25 சதவீதத்துக்கும் மேற்பட்ட காஸ் டேங்கர் லாரிகள் லோடு இல்லாமல் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து மத்திய பெட்ரோலியத் துறை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

புவி அரசியல் (ஈரான் போர்) காரணமாக எல்பிஜி இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை சமாளிக்க பொதுத்துறை, தனியார் எண்ணெய் நிறுவனங்கள் எல்பிஜி உற்பத்தியை அதிகரிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

வீட்டு உபயோக எல்பிஜி சிலிண்டரை முன்பதிவு செய்வதற்கான கால அவகாசம் 21 நாட்களில் இருந்து 25 நாட்களாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்களுக்கு தடையின்றி எல்பிஜி விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. வணிக நிறுவனங்களுக்கான எல்பிஜி விநியோகம் தொடர்பாக 3 சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இவ்வாறு மத்திய பெட்ரோலியத் துறை தெரிவித்துள்ளது.

**எஸ்மா சட்டம் அமல்**

எல்பிஜி தட்டுப்பாட்டை குறைக்கும் வகையில் அத்தியாவசிய சேவைகள் பராமரிப்பு சட்டத்தை (எஸ்மா) மத்திய அரசு அமல்படுத்தி உள்ளது. இதன்படி எல்பிஜி சிலிண்டர்களை பதுக்கினால் எஸ்மா சட்டத்தின்படி 3 மாதங்கள் முதல் 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.

பொதுமக்களுக்கு நியாயமான விலையில் எல்பிஜி கிடைப்பது உறுதி செய்யப்படும். எல்பிஜி விநியோகத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். எல்பிஜி உற்பத்தித் துறையில் வேலை நிறுத்தம் முழுமையாக தடை செய்யப்படும். வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவர் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### பிரதமர் மோடி அவசர ஆலோசனை

சமையல் காஸ் தட்டுப்பாடு குறித்து பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் நேற்று அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி, மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் பெட்ரோலியத் துறை மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில் நாடு முழுவதும் தடையின்றி சமையல் காஸ் சிலிண்டர் விநியோகம் செய்வது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது. மாற்று வழிகள் குறித்து அமைச்சர்கள், அதிகாரிகளுடன் பிரதமர் மோடி விரிவாக ஆலோசனை நடத்தி உள்ளார்.

# மதுரையில் சர்வதேச விமான நிலையம்

**மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல்**

**பொது அறிவு:** காபியை அதிகம் பயிரிடும் நாடு பிரேசில் ஆகும், இது 150 ஆண்டுகளுக்கும் மேலாக உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளராக உள்ளது மற்றும் உலகளாவிய உற்பத்தியில் 30 சதவீதத்துக்கும் அதிகமாக பங்களிக்கிறது.

இந்தியா பல்வேறு தளங்களில் முன்னேறுவதாகச் சொல்லப்பட்டுவரும் நிலையில், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC), தரநிலை 'A' இலிருந்து 'B'க்குக் குறைக்கப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிகழ்வு, இந்திய மனித உரிமைகள் ஆணையத்தின் தற்போதைய சூழல் குறித்தும் எதிர்கால நிலை குறித்தும் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.



**கடும் விமர்சனங்கள்**

மனித உரிமைகளைப் பாதுகாத்தல் / மேம்படுத்துதல், மனித உரிமை மீறல்களை ஆய்வுசெய்தல் விசாரணை நடத்துதல், அரசு – பொது நிர்வாகத்தைக் கண்காணித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் – நீதியை உறுதிசெய்தல், தேசிய, மாநில – சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து, மனித உரிமைகளின் முன்னேற்றத்துக்காகச் செயல்படுதல்போன்ற பல்வேறு செயல்பாடுகளைச் செய்ய வேண்டிய கடமை மனித உரிமை ஆணையத்துக்கு உண்டு. ஆனால், சமீபத்திய ஆண்டுகளில் அதன் சுதந்திரம், பன்முகத்தன்மை, செயல்திறன் ஆகியவை குறித்துக் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதன் விளைவாக, உலகளாவிய தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் கூட்டமைப்பின் (Global Alliance of National Human Rights Institutions – GANHRI) அங்கீகாரத் துணைக் குழு (Sub–Committee on Accreditation – SCA), இந்திய ஆணையத்தின் தரநிலையை 'A' இலிருந்து 'B'க்குக் குறைக்கக் கடந்த ஏப்ரல் மாதம் பரிந்துரைத்தது. இதை எதிர்த்து மேல்முறையீடு செய்த மனித உரிமைகள் ஆணையத்தின் முயற்சி பலனளிக்காமல், தரம் குறைக்கப்பட்ட பரிந்துரை, 4.12.2025 அன்று உறுதிசெய்யப்பட்டது. இது ஏப்ரல் 2026 முதல் அமலுக்கு வரும்.

**தரக்குறைப்பின் பின்னணி**

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பணியில் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் (NHRIs) பின்பற்ற வேண்டிய சர்வதேச அளவுகோல்களை 'பாரிஸ் கொள்கைகள்' வரையறுக்கின்றன. ஒரு நாட்டின் மனித உரிமைகள் ஆணையம் இந்தக் கொள்கைகளை எந்த அளவுக்குப் பின்பற்றுகிறது என்பதை உலகளாவிய தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் கூட்டமைப்பின் அங்கீகாரத் துணைக் குழுதான் மதிப்பீடு செய்கிறது.

தேசிய மனித உரிமைகள் ஆணையம், 2017ஆம் ஆண்டுவரை 'A' தரநிலையைக் கொண்டிருந்தது. ஆனால், 2011 முதலே ஆணையத்தின் அமைப்பு, செயல்பாடுகள், வெளிப்படைத்தன்மை குறித்துப் பல கவலைகளை எஸ்.சி.ஏ. எழுப்பிவந்தது. 2025 ஏப்ரல் மாதப் பரிந்துரைக்கு முன்னர், 2023 – 2024ஆம் ஆண்டுகளிலும் தரநிலை பற்றி முடிவுசெய்வது ஒத்திவைக்கப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக, சீர்திருத்தங்களைச் செய்வதற்குப் பல வாய்ப்புகள் வழங்கப்பட்டபோதிலும், அரசாங்கமோ, ஆணையமோ தேவையான நிறுவனச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவில்லை. இது, பாரிஸ் கொள்கைகளைத் தொடர்ச்சியாகப் பின்பற்றவில்லை என அங்கீகாரத் துணைக் குழு கருதக் காரணமாக இருக்கிறது.

**குறைபாடுகள்**

ஆணையத்தின் அங்கீகாரத்தைத் தரம் குறைக்க முக்கியமாக மூன்று துறைகளில் நீண்ட காலமாக நிலவும் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. சுதந்திரம், அமைப்பு, பன்முகத்தன்மை - இவை முதன்மையானவை. ஆணையத்தின் சுதந்திரமே அதன் முதன்மையான பலம். ஆனால், எஸ்.சி.ஏ–வின் அறிக்கைகள் ஆணையத்தின் உண்மையான – உணரப்பட்ட சுதந்திரம் (actual and perceived independence) குறித்துக் கவலை தெரிவிக்கின்றன. ஆணையத்தின் பொதுச் செயலாளர், விசாரணை இயக்குநர் போன்ற உயர் பதவிகளுக்கு, மத்திய அரசில் பணிபுரியும் சிவில் ஊழியர்கள், காவல் துறை அதிகாரிகள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்கிற சட்டம், ஆணையத்தின் சுதந்திரத்தைக் கேள்விக்கு உள்ளாக்குகிறது. இந்தப் பணியாளர்கள் ஆதிக்கம் செலுத்துவது, அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் சுதந்திரமாகச் செயல்படும் திறனைக் குறைக்கிறது. பதவி நியமனத்தில் பன்முகத்தன்மை இல்லாமை – ஆணையத்தின் தலைவர் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியாகவோ முன்னாள் நீதிபதியாகவோ இருக்க வேண்டும் என்கிற கட்டாய விதி, போட்டியாளர்களின் எண்ணிக்கையைக் கடுமையாகக் கட்டுப்படுத்துகிறது.

பெரும்பாலான உறுப்பினர்கள் நீதித் துறையில் இருந்து நியமிக்கப்படுவதால், ஆணையத்தின் முடிவெடுக்கும் அமைப்பில் பல்வகைமை, பன்முகத்தன்மை (diversity and plurality) குறைபாடு உள்ளது. ஆணையத்தின் மொத்த ஊழியர்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை. வெளிப்படையற்ற தேர்வுச் செயல்முறை இல்லை.

அடுத்தது, செயல்திறன் – பொறுப்புடைமை. ஆணையத்தில் புகார்களைக் கையாளும் செயல்பாடுகள் – வழிமுறைகள் உடனடித் தீர்வு வழங்காமல், தாமதங்களுக்கு வழிவகுக்கின்றன. மனித உரிமை மீறல்களுக்காகக் காவல் துறையே குற்றம்சாட்டப்படும் சூழ்நிலைகளில், அதே துறையைச் சார்ந்த காவல் அதிகாரிகளை விசாரணையில் ஈடுபடுத்துவது, ஆணையத்தின் மீதான நம்பகத்தன்மையைப் பாதிக்கிறது.

இறுதியாக – குடிமைச் சமூகத்துடனான உறவு. மனித உரிமைகளுக்காகச் செயல்படும் குடிமைச் சமூக அமைப்புகளுடன் பயனுள்ள – ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை ஆணையம் கொண்டிருக்கவில்லை. ஆணையத்துக்கு ஆலோசனைக் குழுக்கள் இருந்தபோதிலும், பெயரளவுக்கு, ஆணையச் செயல்பாடுகளை விமர்சிக்காத சில அமைப்புகளுடன் மட்டும் தொடர்பில் இருப்பது சிறந்த செயல்பாட்டுக்கு வழிவகுக்காது.

**விளைவுகள்**

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அங்கீகார நிலை 'A' இலிருந்து 'B' ஆகக் குறைந்தால், அது சர்வதேச அரங்கில் சில குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும். ஐ.நா. அவையின் மனித உரிமைகள் கூட்டங்களில் சுதந்திரமாகச் செயல்படுவது, பங்கேற்பது ஆகியவற்றுக்கான வாய்ப்பையும் ஆணையத்துக்கு உள்ள அதிகாரத்தையும் இழக்க நேரிடும்.

வேறெந்த நாடுகளிலும் இல்லாத அளவு இந்தியாவில் 169 தேசிய – மாநில அளவிலான ஆணையங்கள் இருக்கின்றன. இதற்கெல்லாம் தலைமை அமைப்பாகக் கருதப்படும் தேசிய மனித உரிமை ஆணையத்தின் தரம் குறைக்கப்பட்டால், அது மற்ற அமைப்புகளையும், அவற்றின் செயல்பாடுகளையும் வெகுவாகப் பாதிக்கும். இந்த அமைப்புகளின் மீதான நம்பகத்தன்மையைக் குறைக்கும்.

**செய்ய வேண்டியவை**

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தரக் குறைப்பு என்பது, ஆணையத்தின் மீது எழுப்பப்பட்ட விமர்சனங்களின் ஆழத்தையும் தீவிரத்தையும் பிரதிபலிக்கிறது. நியமனங்களில் சுதந்திரத்தைப் பேணுவது, பன்முகத்தன்மையை உறுதிசெய்வது, புகார்களைத் திறம்படக் கையாளுதல், அமைப்புரீதியான மீறல்களுக்கு எதிராகத் துணிச்சலாகக் குரல்கொடுத்தல் என்பது போன்ற விஷயங்களில் ஆணையம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டும். ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளாக இப்பதவி நிரப்பப்படவில்லை.

தரக் குறைப்பு என்பதை ஓர் எச்சரிக்கை மணியாகக் கருத வேண்டும். இது, பாரிஸ் கொள்கைகளுடன் முழுமையாக இணங்குவதை உறுதிசெய்வதற்கும் இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் மனித உரிமைகளைப் பாதுகாத்து நீதியை நிலைநாட்டுவதற்கும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இழந்த மாண்பை மீட்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

சொல்... பொருள்... தெளிவு

# இளையோரைச் சீரழிக்கும் டிஜிட்டல் போதை

கருவிகளின் உள்ளடக்கத்தைக் கட்டுப்படுத்துகிற வழிமுறைகளைச் செயல்படுத்தலாம்



'ஒருகாலத்தில் பண்ணைகளில் வாழ்ந்தோம்; பிறகு நகரங்களில் வாழ்ந்தோம்; இப்போது இணையத்தில் வாழ விழைந்துகொண்டிருக்கிறோம்' என்கிற வாக்கியம் அமெரிக்காவில் மிகவும் பிரபலம். இன்றைக்குச் சிறார் முதல் பெரியோர்வரை அனைவரும் டிஜிட்டல் (எண்ணிலக்க) கருவிகளைச் சார்ந்து வாழத் தலைப்பட்டுவிட்டனர். இந்தப் பயன்பாடு அதீதம் என்னும் நிலையைக் கடந்து, அடிமையாகும் நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. இந்தச் சூழல் இன்னும் விஸ்வரூபம் எடுக்கக்கூடும் என்கிற எச்சரிக்கை, அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் (Economic Survey) இடம்பெற்றிருக்கிறது.

**டிஜிட்டல் அடிமையாதல்**

வேகமாக வளர்ந்துவரும் டிஜிட்டல் பொருளாதாரம், வலுவான டிஜிட்டல் கட்டமைப்பு, மலிவான கட்டணத்தில் இணைய வசதி போன்றவற்றால் ஒரு டிஜிட்டல் சமூகமாக முன்னேற்றம் கண்டுவருகிறது இந்தியா. 2023ஆம் நிதி ஆண்டின் தேசிய வருவாயில் 11.74% பங்களிப்பு டிஜிட்டல் பொருளாதாரத்தின் வழியே கிடைத்ததாகச் சொல்கிறது மத்திய அரசு. பெருமளவு பயன்பாடு, வருவாய் ஈட்டலை முன்வைத்து 2025இல் இது 13.42% ஆக உயரக்கூடும் என இந்த ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது.

இந்தியாவில் 2014ஆம் ஆண்டு 25.15 கோடி என இருந்த இணைய இணைப்புகளின் எண்ணிக்கை 2024இல் 96.96 கோடியாக உயர்ந்தது. 2025இல் குறைந்தபட்சம் ஒரு திறன்பேசி வைத்திருக்கிற வீடுகளின் எண்ணிக்கை 85.5% என்றாகியிருக்கிறது. 2024இல் மட்டும் ஓடிடி, உணவு விநியோகச் செயலிப் பயனர்களின் எண்ணிக்கை 40 கோடியாகவும் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 35 கோடி எனவும் பதிவாகியுள்ளது.

டிஜிட்டல் சூழலால் எந்த அளவுக்கு வசதி வாய்ப்புகள் அதிகரித்திருக்கின்றனவோ, அதே போன்று அவற்றின் எதிர்மறைத் தாக்கமும் அதிகமாக இருப்பதைச் சில ஆய்வுகள் உணர்த்துகின்றன. கட்டாயமான, அதிகப்படியான டிஜிட்டல் கருவிகள் பயன்பாட்டால் பொருளாதார, சமூக அளவில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. உடல் குறைபாடுகள், மனநலக் குறைபாடுகள், நிதி இழப்புகள், மாணவர்களின் கல்வி, பணியாளர்களின் செயல்பாடுகளில் மந்தநிலை உள்ளிட்டவை இந்த வரிசையில் சேரும்.

**கட்டுப்பாடுகள்**

திறன்பேசிகள், கேமிங் தளங்கள், சமூக வலைத்தளங்கள் என்று டிஜிட்டல் கருவிகளில் ஒரு நாளின் பெரும்பொழுதுகளைச் செலவழிப்பதை டிஜிட்டல் போதைப்பழக்கம் என வரையறுக்கிறது மருத்துவ உலகம். உறவுகள், நட்புப் பிணைப்பு பலவீனமாவது, சமூகப் பங்கேற்பு குறைவது, வழக்கமான திறன்களை இழப்பது போன்றவற்றில் தொடங்கிப் பலவற்றுக்கு இது காரணமாகிறது.

டிஜிட்டல் கருவிகளுக்கு அடிமையாதல் என்பது உலகளவில் முக்கியப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது; ஒழுங்குமுறை, சிகிச்சை, கல்விப்புலம் சார்ந்த நடவடிக்கைகளை அரசும் சுகாதார அமைப்புகளும் சமூகமும் மேற்கொள்வதற்கான தூண்டுதலை ஏற்படுத்தி உள்ளது. 'கேமிங் பிரச்சினை'களின் கீழ் ஐசிடி–11இல் ஒரு மனநலக் குறைபாடாக 'கேமிங் அடிமையாத'லை வகைப்படுத்தியிருக்கிறது உலகச் சுகாதார நிறுவனம். மற்ற செயல்பாடுகளைவிட கேமிங்கில் அதிக ஆர்வம் காட்டுதல், அந்தச் செயல்பாட்டில் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க இயலாமை, எதிர்மறை விளைவுகளுக்கு மத்தியிலும் அதைத் தொடர்தல் போன்றவற்றால் இது வரையறுக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் 16 வயதுக்குக் கீழ் உள்ளவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த அண்மையில் தடை விதிக்கப்பட்டது. தென் கொரியாவில் நள்ளிரவில் கேமிங் தளங்களைப் பயன்படுத்தச் சிறாருக்குத் தடை உள்ளது. சீனாவில் பயனர்கள் உண்மையான பெயரைப் பயன்படுத்தி கேமிங் விளையாடும் வகையிலான கட்டுப்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. பிரேசில், ஃபிரான்ஸ், பின்லாந்து, ஸ்பெயின், ஜப்பான் போன்ற நாடுகளிலும், அமெரிக்காவின் சில மாகாணங்களிலும் மாணவர்கள் டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்துவதற்குக் கடுமையான கட்டுப்பாடுகள் பின்பற்றப்படுகின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை, பதினாறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடக அணுகலைக் கட்டுப்படுத்துவதற்கான முன்மொழிவை கர்நாடக அரசு அறிவித்துள்ளது. மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) பள்ளிகள், பள்ளிப் பேருந்துகளில் பாதுகாப்பான இணையப் பயன்பாட்டுக்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. மத்திய சுகாதாரத் துறையின் கீழ் 2022 முதல் 'டெலி–மானஸ்' (Tele MANAS) என்னும் இலவச மனநல உதவிமையச் சேவை செயல்படுத்தப்படுகிறது. 2024இல் அறிமுகப்படுத்தப்பட்ட இதற்கான செயலியில் டிஜிட்டல் அடிமையாதலைத் தடுப்பது உள்ளிட்ட அம்சங்கள் இடம்பெற்றன. அதிகப்படியான தொழில்நுட்பப் பயன்பாட்டால் பாதிப்புக்கு உள்ளான இளையோரை மீட்டெடுக்கும் வகையில் பெங்களூருவின் நிம்ஹான்ஸ்–இல் உள்ள 'ஷட்' (SHUT – Service for Healthy Use of Technology) செயல்பட்டுவருகிறது.

டிஜிட்டல் போதை, நிதி இழப்புகள் போன்றவற்றில் இளையதலைமுறையினர் சிக்குவதைத் தடுக்கும் வகையில் இணைய விளையாட்டு (ஒழுங்குமுறை) சட்டம் 2025 மத்திய அரசால் கொண்டுவரப்பட்டுள்ளது. சூதாட்ட முறையில் பணத்தைப் பயன்படுத்தும் இணைய விளையாட்டுகளுக்குத் தடை விதிப்பது, விளம்பரங்களைக் கட்டுப்படுத்துவது, அனுமதிக்கப்பட்ட திறன் அடிப்படையிலான விளையாட்டுகளுக்கான ஓர் உரிமக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துவது ஆகியவற்றை இது மேற்கொள்கிறது.

கல்லூரிகள், பணியிடங்களில் டிஜிட்டல் அடிமையாதலைத் தடுக்கும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவது, தொழில்நுட்பம் இல்லாத பகுதிகளை உருவாக்குவது, ஆரோக்கியமான டிஜிட்டல் பழக்கங்களைப் பின்பற்றுகிற வகையில் வழிகாட்டுதல் அமைப்பைச் செயல்படுத்துவது, 'டிஜிட்டல் டயட்' என்கிற பெயரில் டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தாத சூழலை எதிர்கொள்வது போன்றவற்றைப் பின்பற்ற முயல்வது பலன் தரும். டிஜிட்டல் போதைக்கு அடிமையானவர்களை மீட்கும் வகையில் கர்நாடகத்தில் 'டிஜிட்டல் போதைத் தடுப்பு மையம்' செயல்படுத்தப்படுகிறது.

டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்துகிற வழக்கம் பள்ளிப் பருவத்திலேயே பெருகிவரும் நிலையில், அவற்றின் பயன்பாட்டுக்கும் மனநலனுக்குமான பிணைப்பு குறித்து மாணவர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமானது. அதேபோலக் குடும்பங்களும் திறன்பேசி அல்லது கணினித் திரையைப் பார்ப்பதற்கான கட்டுப்பாடுகளைக் கடுமையாக்க வேண்டியது அவசியம். அக்கருவிகள் இல்லாத சூழலை எதிர்கொள்ள, குழந்தைகளைப் பெற்றோர் பழக்குவதோடு வேறு விளையாட்டுகள், செயல்பாடுகளில் அவர்களைத் திருப்பலாம். சிறப்பம்சங்கள் இல்லாத கைபேசி, கற்றலுக்கு மட்டுமே பயன்படுத்தத்தக்க டேப்லெட் போன்ற கருவிகளைக் குழந்தைகளிடம் கொடுக்கலாம். அக்கருவிகளின் உள்ளடக்கத்தைக் கட்டுப்படுத்துகிற வழிமுறைகளைச் செயல்படுத்தலாம். இவற்றோடு 'டெலி–மானஸ்' செயலி மூலமாகத் தரப்படுகிற ஆலோசனைகளைப் பள்ளி, கல்லூரிகள் அளவில் ஒருங்கிணைப்பதும் காலத்தின் தேவை.

தொகுப்பு: **பா.உதயசங்கரன்**